## ‘ந கர்மணா’ என்று தொடங்கும் வேத மந்திரத்தின் பொருள்; பகவான் அருளிச் செய்தது

## Meaning of ‘Na Karmana’ bestowed by Bhagavan

...1948ஆம் வருடம் ஜூலை மாதம் பக்தர் ஒருவர் பகவானிடம், இங்கே எந்த நல்ல காரியம் நடந்தாலும், உங்களிடம் வந்து ஆசியைப் பெற்று ‘ந கர்மணா’ மந்திரத்தைச் சொல்கிறார்களே இது எதற்கு? ‘ந கர்மணா – மந்திரத்தின் அர்த்தம் அம்ருதத்வமானது கர்மத்தாலும், புத்திரர்களாலும், பிரஜைகளாலும், தனத்தாலும் அடைய முடியாதென்றே சொல்கிறது. ஆனால் அந்த மந்திரத்தைப் படித்துக்கொண்டே, கர்மம் செய்கிறோமே! இதென்ன என்று கேட்டார்.

பகவான் அதற்குப் புன்சிரிப்புடன், “அதுவா! சரி; சரி, படிக்கும் மந்திரத்திற்கு முதலில் அர்த்தம் தெரிந்துகொண்டால் இவைகளுடைய தேவையே இல்லைதான். அந்த மந்திரத்தை இங்கே எத்தனைமுறை படிக்கிறார்கள்! அர்த்தம் புரிந்துகொண்டு அந்த வழிமுறையில் கடைப்பிடிக்க முயற்சித்தால் நல்லது. ஆனால் அதைச் செய்வது யார்? ஏதோ நல்ல கர்மாக்கள் நடந்து கொண்டிருக்கிறது. நல்லதுதானே என்று நான் ஒன்றும் சொல்லுவதில்லை” என்று சொன்னார்.

மற்றொரு பக்தர் தொடர்ந்து அந்த ‘ந கர்மணா’ மந்திரத்தின் பொருளை விளக்கவேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டார். “சரி; சரி, இதற்குமுன் யாரோ ஒருவர் இந்த மாதிரி கேட்டபொழுது வித்யாரண்யர் எழுதியுள்ள பாஷ்யத்தைக் காட்டினோம். அது அவருக்கு சரியாகப் புரியாததால் நானே விவரமாகச் சொல்ல வேண்டி வந்தது. தமிழில் அந்த விவரம் 1938-இல் எழுதிக் கொடுத்தேன். அந்தக் காகிதத்திற்கு அவர்கள் ஒரு கண்ணாடி ப்ரேம் போட்டு போஜன சாலையில் மாட்டியிருக்கிறார்கள். அதைப் பாருங்கள்” என்று கூறினார் பகவான்.

– ‘ஸ்ரீரமணாச்ரம வாழ்வும் நினைவும்’; சூரிநாகம்மா

...a devotee asked Bhagavan, “I find that whenever puja and the like is to be done, people bring all required articles to Bhagavan for his blessings and Bhagavan blesses by touching them. Puja is karma. Almost simultaneously the mantra “Na Karmana” is repeated whose meaning is that liberation is attained not by doing karma or by raising a family or by wealth but only by thyaga i.e. renunciation. Is it not self-contradictory?” Bhagavan smiled and said, “Yes. Yes. **If they understand the real meaning of what they repeat they would not do all this. How often is this mantra repeated here! Were people to find out the meaning and put it into practice, it would be good.** But who will do it? Some rituals are being performed for worshipping God. It is after all a good thing. There is nothing lost in my touching the puja articles and so I do it. That is all.”

Another devotee requested Bhagavan to tell him the meaning of that Mantra. “Is that so?” said the Master. “Some time back, a devotee made a similar request and I showed him the commentary written by Vidyaranya. He said he could not understand it properly, and so I had to tell him the meaning. To avoid any such requests in future, I wrote the meaning in Tamil. That was sometime in 1938. Later the people here put it in a frame and hung it in the dining hall. See it and you will understand the meaning.”

– *My life at Sri Ramanasramam*; Suri Nagamma

(திணை)

அம்மெய்ந்நவமனது கர்மத்தாலும், புர்வாதிய
வம், தானத்தாலும் அடையப்படுவதன்று
(அவற்றின்) தியாகத்தால் (அர்த்தமின்மையால்) சி
லர் அடைகின்றனர்

ஸ்வர்க்கத்திற்கு மேலாக (குகையில்) மனதில் விளங்கு
வதும் விளங்குகின்றதை (இந்திரிய நிக்
ரஹ) யதிகள் அடைகின்றனர்

வேதாந்தங்களும் விஞ்ஞானத்தால்
உறுதிப்பொருளை தெளிந்தோரும் ஸந்யாஸ (யோ
கமான) யோகத்தால் (மனவொருமை) சுத்தசத்வ.
அத்தகையோர் (ஞானிகள்) யாவரும்
பிரம்மலோகத்தில் (பரமபதத்தில்) (அமிர்த
மாற்ற) பராந்தகாலத்தில் மேலான மரண
மற்றும் விடுபடுகின்றனர்
(முக்தியில்)

உடலினின்று அறுபடும் அமைதியும் பரம்பொரு
ளின் இருப்பிடமான ஹ்ருதய கமலத்தினுள் மாற்றுலக
ம் துன்பமில்லா ஞானமான விளங்குவதை (ஸூக்ஷ்ம)
வழிபடுபவர்

வேதாந்தியரும் வேதாந்தத்துக்கு மேலானதை
யும் (தியானத்தால்) பிரம்மத்தில் ஆ
ழ்ந்திருப்பதுமான பிரணவ (ஸ்வரம்) ஒலிக்
கும் பொருளானோனே பரமேஸ்வரன் என் -
(பரமேசனான)

10-9-38

## ‘ந கர்மணா’ (தமிழ் மற்றும் ஆங்கில அக்ஷரப் பெயர்ப்பு)

## ‘Na Karmana’ (Tamil and English Transliteration)

ந கர்மணா ந ப்ரஜயா த$^{4}$னேன த்யாகே$^{3}$னைகே அம்ரு’தத்வ-மானஶு: ।
பரேண நாகம் நிஹிதம் கு$^{3}$ஹாயாம் விப்$^{4}$ராஜ-தே$^{3}$தத்$^{3}$யதயோ விஶந்தி ॥

வேதாந்தவிஜ்ஞான-ஸுனிஶ்சிதார்தா:$^{2}$ ஸன்யாஸ-யோகா$^{3}$த்$^{3}$யதய-ஶ்ஶுத்$^{3}$த$^{4}$ஸத்த்வா: ।
தே ப்$^{3}$ரஹ்மலோகே து பராந்தகாலே பராம்ரு’தாத்பரிமுச்யந்தி ஸர்வே ॥

த$^{3}$ஹ்ரம் விபாபம் பரமேஶ்மபூ$^{4}$தம் யத்புண்ட$^{3}$ரீகம் புரமத்$^{4}$யஸங்கு$^{3}$ஸ்த$^{2}$ம் ।
தத்ராபி த$^{3}$ஹ்ரம் க$^{3}$க$^{3}$னம் விஶோக-ஸ்தஸ்மின் யத$^{3}$ந்தஸ்த-து$^{3}$பாஸிதவ்யம் ॥

யோ வேதா$^{3}$தௌ$^{3}$ ஸ்வர: ப்ரோக்தோ வேதா$^{3}$ந்தே ச ப்ரதிஷ்டி$^{2}$த: ।
தஸ்ய ப்ரக்ரு’தி-லீனஸ்ய ய: பரஸ்ஸ மஹேஶ்வர: ॥

na karmaṇā na prajayā dhanena tyāgenaike amṛtatva-mānaśuḥ |
pareṇa nākaṁ nihitaṁ guhāyāṁ vibhrāja-detadyatayo viśanti ||

vedantavijñāna-suniścitārthāḥ sanyāsa-yogādyataya-śśuddhasattvāḥ |
te brahmaloke tu parāntakāle parāmṛtātparimucyanti sarve ||

dahraṁ vipāpaṁ parame'śmabhūtaṁ yatpuṇḍarīkaṁ puramadhyasaṁ̐stham|
tatrāpi dahraṁ gaganaṁ viśoka-stasmin yadantasta-dupāsitavyam ||

yo vedādau svaraḥ prokto vedānte ca pratiṣṭhitaḥ |
tasya prakṛti-līnasya yaḥ parassa maheśvaraḥ ||

## 'ந கர்மணா' (தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பு)

## 'Na Karmana' (Tamil and English Translation)

1. அம்ருதத்வம் கர்மத்தாலும் புத்திராதி (பிரஜை)யாலும், தனத்தாலும் அடையப்படுவதன்று. (அவற்றின்) த்யாகத்தால் (அந்தர்முகிகள்) சிலர் (அதனை) அடைகின்றனர். ஸ்வர்கத்தினுமிக்கதாய் (ஹிருதய) குகையிலிருந்து விசேஷமாய் விளங்கும் இந்த ஸத்தை (இந்திரிய நிக்ரக) யதிகள் அடைகின்றனர்.

2. வேதாந்தங் கூறும் விசேஷ ஞானத்தால் உறுதிப் பொருளுணர்ந்தோரும், தியாக (ஸந்யாஸ) யோகங் (மனவொருமை) களால் சுத்த சித்தருமான யதிகள் (சாந்தர்) யாவரும் பிரஹ்ம லோக (ஸாக்ஷாத்கார)த்தில் (அஜ்ஞானமற்று), தேகாந்த காலத்தில் மூலமாயையினின்று முற்றும் விடுபடுகின்றனர்.

3. உடனடுவில் (புரமத்தியில்) அற்பமும் அமலமும் பரம்பொருளினிருப்பிடமுமா மிதயகமலத்தினுள் துன்பற்றிலங்கும் நுண்ணிய விண்ணுருவா விளங்குமதுவே (பிரஹ்மமே) வழிபடற்பாலது.

4. வேதாதியிலும் வேதாந்தத்திலுமுள்ளதாய்ச் சொல்லப்படுவதும் (தியானத்தால்) பிரகிருதியில் ஒடுங்குவதுமாம் பிரணவ (ஸ்வர)த்திற்குப் பரனாயுள்ளோனே பரமேசுவரனா (பரம்பொருளா)வான்.

– *ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்*, 9-9-1938

Deathlessness is not obtained through action or begetting offspring or wealth. Some attain that state through renunciation.

The Sages (that have conquered the senses) attain that Sat which is more supreme than Heaven and shining all alone in the Heart.

The adepts, who by renunciation and one-pointedness are pure in heart and have known the certainty of Truth by the special knowledge proclaimed by Vedanta, get fully released in the Brahmaloka from the causal Maya at the dissolution of the body.

That alone which shines as the tiny Akasa void of sorrow, in the lotus heart, the tiny seat of the spotless Supreme in the (inner) core of the body is worthy of worship.

He alone is the Supreme Lord, who is beyond the Primal Word which is the beginning and end of the Veda and in which merges the creative Cause.

– *Talks with Sri Ramana Maharshi,* Talk 511